4th August 1966]

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே, கொடைக்கானல் மலையிலும், பழனி மலையிலும் பாக்ஸைட் டெபாஸிட்ஸ் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றை எப்பொழுது எடுத்துப் பயன் படுத்தி அலுமனியம் உற்பத்தி செய்வதாக சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது எவ்வளவு கிடைக்கும் என்பதெல்லாம் ஆராயப்பட்டு வருகிறது. 1967-ம் ஆண்டு தொடக்கத்தில்தான் எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். அதற்குப் பிறகு எத்தகைய தொழிற்சாலையை அமைக்க முடியும் என்ற பரிசிலனை எடுத்துக் கொள்ளப்படும்.

Fertilizer Plan near Madras.

* 70 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } SRI V. SANKARAN : } Will the Hon. the Chief Minister be pelased to state the details of the proposal for starting a Fertiliser Plant near Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of India have prposed to set up a fertilizer factory in the public sector as an adjunct to the petroleum refinery near Manali, with the colloboration of the American International Oil Company.

திரு. வை. சங்கரன் : அமெரிக்கன் கொலாபரேஷனின் அளவு என்ன ? அந்த தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது ? அந்தத் தொழிற்சாலையின் 'கபாசிடி' என்ன ?

• THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of India have decided to set up a petroleum refinery with a capacity of 2.5 tonnes of crude petroleum at Manali. In the refinery complex, a fertiliser project with an annual capacity of 2,00,000 tonnes of nitrogen to produce mostly complex fertilisers will also be set up among others.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உர வகைகள் நமது ராஜ்யத்திற்கே பயன்படுமா ? விலை நிர்ணயிக்கும் உரிமை யாருக்கு இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் நம் மாநிலத்திற்கே பயன்படும் என்று சொல்ல முடியாது. "ஆல்-இண்டியா ஃபெர்ட்டிலைஸர் பூல்" இலிருந்து பல மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விலை எப்படி இருக்கும் என்பது பற்றிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதர ராஜ்யங்களுக்குப் போவதைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. இதில் அமெரிக்கர்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இங்கு உற்பத்தி செய்யும் உர வகைகளுக்கு அவர்கள் இஷ்டப்படி விலை நிர்ணயிக்கலாம், அவர்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும், வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி

[4th August 1966

செய்யலாம் என்ற வகையில் ஒப்பந்தத்தின் ஷரத்து ஒன்று இருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால், அதை எப்படி நமது ராஜ்யத்திலே ஏற்றுக்கொண்டார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அத்தகைய தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER: Question No. 71 is postponed at the request of the Government.

ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் துணை சேவக்குகள்

*72 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன இலாகாவில் சென்ற ஆண்டு வரை எத்தனை டிப்டி சேவக்குகள் பணியாற்றி வந்தனர், ஜில்லாவாரியாக?

(இ) அவர்களில் எத்தனை பேர் இப்போது வேலை செய்து வருகின்றனர்?

(உ) அவர்களுக்கு இப்போது என்ன பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது?

(எ) அவர்களின் அலுவல் விவரம் என்ன?

(ஐ) ஹோட்டல்களில் தீண்டாமை பாராட்டப்படுவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறதா?

(ஒ) இல்லையெனில், அவர்களுக்கு அந்த அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன் (அ) முதல் (ஒ) வரை: சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இந்தக் குழுவிற்கு அவகாசம் இருப்பதன் காரணமாக, நிலங்களுக்குரிய ஏ.பி. லிஸ்ட் என்பதைத் தயாரிக்கக்கூடிய வேலையை இந்தக் குழுவிற்கு ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: பிரசாரத்திற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையை அவர்கள் சரியாகச் செய்ய வேண்டும். அவர்களுக்கு இதர வேலைகளைக் கொடுத்தால் சரியாகச் செய்யமாட்டார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற வேலையை அரிசன நல இலாக்கா சம்பந்தப்பட்ட அன்பர்களும் மற்றவர்களும் பார்க்கக் கூடும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இவ் விலாகாவில் பணி செய்கின்ற டெபுடி சேவக்குகளுக்கு மாதம் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது? அவர்களுக்கு ஏதேனும் விசேஷ அலவன்ஸ், கிராக்கிப்படி கொடுக்கப்படுகிறதா என்று அறியலாமா?

---

[a] 441–442-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது